**<u>சிறப்பு சார்பு நீதிமன்றம், (மோட்டார் வாகன விபத்து இழப்பீடு தீர்ப்பாயம்)</u>**
**<u>திருப்பத்தூர், திருப்பத்தூர் மாவட்டம்</u>**
**<u>MCOP . No.96/2026</u>**

**ம.சா.2 வெற்றி த/பெ ராஜா** **நாள் : 16.06.2026**

**<u>2 ஆம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

இந்த விபத்தில் இறந்த போன ரஷிகேஷ் என் அண்ணன் மகன். இந்த விபத்து குறித்து காவல்நிலையத்தில் நான் தான் புகார் கொடுத்தேன். இந்த விபத்து சமயத்தில் நான் ரஷிகேஷ் மற்றும் இன்பா மூவரும் டீ கடைக்கு எதிரில் மூவரும் சாலையை கடக்கும் போது தேசிய நெடுஞ்சாலையில் விபத்து ஏற்பட்டது என்றால் சாலையை நாங்கள் கடக்கவில்லை. நான் ஆறாம் வகுப்பு வரை படித்துள்ளேன். என்னுடைய புகாரில் கிருஷ்ணகிரியில் இருந்து வாணியம்பாடி நோக்கி தேசிய நெடுஞ்சாலையில் தெற்கில் இருந்து வடக்கு நோக்கி ரோட்டை கடந்த போது கிருஷ்ணகிரியில் இருந்து வந்த பார்ச்சுனர் கார் மோதி விபத்து ஏற்பட்டதாக கூறியுள்ளேன் என்றால் என்னிடம் காட்டப்படும் புகாரில் அவ்வாறு உள்ளது. இந்த விபத்திற்கு என்னுடைய அஜாக்கிரதை தான் காரணம் என்றால் இல்லை. என்னுடைய அஜாக்கிரதையை மறைக்க பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

சாட்சி விசாரணை என்னால் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைகள் திருத்தப்பட்டு சரிபார்க்கப்பட்டு, சாட்சியிடம் கொடுத்து அவர் படித்து பார்த்து சரி கையொப்பம் செய்தார்.

ஒம்/.S.மைதிலி,
சிறப்பு சார்பு நீதிபதி,
திருப்பத்தூர்.